பண்டித ஜவஹர்லால் நேரு வேளாண் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையம்,
காரைக்கால் & இந்திய வானிலைத்துறை
புதுச்சேரி மாவட்ட வானிலை சார்ந்த வேளாண் அறிக்கை
(02.07.2022 முதல் 06.07.2022 வரை)
தொ. எண் (அலுவலகம்): 04368 – 261182
E-mail: agronaas2012@gmail.com தொ. நகல் (அலுவலகம்): 04368-261260

அறிக்கை எண்: 052 (07) PJN/GKMS/2022 தேதி: 01.07.2022

## புதுச்சேரி மாவட்ட வானிலை சார்ந்த வேளாண் அறிக்கை

| கடந்த வார வானிலை (28.06.2022 முதல் 30.06.2022 வரை) | | | வானிலை காரணிகள் | அடுத்த ஐந்து நாட்களுக்கான வானிலை முன்னறிவிப்பு -06.07.2022 – 8.30 மணி நேரம் வரை | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 28/06 | 29/06 | 30/06 | | நாள்-1 02/07 | நாள்-2 03/07 | நாள்-3 04/07 | நாள்-4 05/07 | நாள்-5 06/07 |
| 0.0 | 0.2 | 0.0 | மழை (மி.மீ) | 0 | 6 | 4 | 0 | 0 |
| 35 | 36 | 37 | அதிகபட்ச வெப்பநிலை (டி.செ) | 37 | 36 | 35 | 35 | 34 |
| 27 | 26 | 26 | குறைந்தபட்ச வெப்பநிலை (டி.செ) | 27 | 25 | 26 | 26 | 26 |
| 5 | 4 | 5 | மேக மூட்டம் | 5 | 6 | 6 | 4 | 4 |
| 65-68 | 69-75 | 60-64 | ஈரப்பதம் (%) | 60-70 | 60-70 | 65-75 | 65-75 | 65-75 |
| 4 | 4 | 4 | காற்றின் வேகம் (கி.மீ) | 12 | 12 | 12 | 12 | 12 |
| தென் கிழக்கு | தெற்கு | தென் மேற்கு | காற்றின் திசை | தென் மேற்கு | தென் மேற்கு | தென் மேற்கு | தென் மேற்கு | தென் மேற்கு |

**எதிர்பார்க்கப்படும் வானிலை (02.07.2022 முதல் 06.07.2022 வரை):**

- ஜூலை 03 தேதியில் ஓரிரு இடங்களில் கன மழையும் மற்றும் ஜூலை 04 தேதியில் லேசான மழையும் பெய்யக்கூடும்.
- ஜூலை 02 மற்றும் 03 தேதிகளில் இடியுடன் மின்னல் ஓரிரு இடங்களில் இருப்பதற்கு வாய்ப்புள்ளது.
  - அடுத்த ஐந்து நாட்களுக்கு வானம் மேகமூட்டத்துடன் காணப்படும். வெப்ப நிலை 25-37 டி.செ, மாலை மற்றும் காலை நேர காற்றின் ஈரப்பதம் 60-75 சதவிகிதமாகவும், காற்றின் வேகம் மணிக்கு 12 கி.மீ அளவுக்கு பதிவாக வாய்ப்புள்ளது. காற்றானது பெரும்பாலும் தென் மேற்கு திசையிலிருந்து வீசக்கூடும்.
  - ஜூலை 06 லிருந்து 12 வரை மழை (1.92 மி.மீ) இயல்பிற்கு குறைவாகவும், அதிகபட்ச வெப்பநிலை (31.24 டி.செ) மற்றும் குறைந்தபட்ச வெப்பநிலை (24.69 டி.செ) இயல்பாக இருப்பதற்கும் வாய்ப்புள்ளது.

வேளாண் அறிவுறை

| பயிர்கள் / கால் நடைகள் | பருவம்/ விவரங்கள் | வேளாண் ஆலோசனைகள் |
|---|---|---|
| கரும்பு | கிளைப்பு பருவம் | கரும்பில் குருத்துப் பூச்சியை கட்டுப்படுத்த, ஹெக்டருக்கு கார்டேப்ஹைட்ரோகுளோரைட் 4 ஜி 10 கி. கி என்ற அளவில் மண்ணில் இடவும். |
| கத்தரி | பூக்கும் பருவம் | கத்தரி பயிரில் காய் பூச்சிகளை கட்டுப்படுத்த ஹெக்டருக்கு வேப்பம் புண்ணாக்கு 200 கிலோ என்ற அளவில் மண்ணில் இடவும் அல்லது எமாமெக்டின் பென்சோயேட் 4% SG லிட்டருக்கு 0.4 கிராம் என்ற அளவில் தெளிக்கவும். |
| மரவள்ளிக் கிழங்கு | வளர்ச்சி பருவம் | மரவள்ளிக்கிழங்கில் செம்பேனை கட்டுப்படுத்த , ஹெக்டருக்கு புங்கம் எண்ணெய் 500 மி.லி அல்லது புரோபர்கைட் 750 மி.லி மற்றும் சல்பர் 1250 கிராம் பயன்படுத்தவும். |

**குறுஞ்செய்தி:** அடுத்த சில தினங்களுக்கு லேசான முதல் கன மழை எதிர்பார்க்கப்படுவதால் பயிர்களுக்கு நீர் பாய்ச்சுவதை ஒத்திவைக்கலாம்.

முதல்வர்